**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(17.06.2015 முதல் 21.06.2015)**

**அறிக்கை எண் 46/2015** **தேதி: 16.06.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 33°செ முதல் 40°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 28°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணபட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (17.06.2015 முதல் 21.06.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17.06.15 | 0 | 33 | 23 | 6 | 78 | 65 | 16 | தென் மேற்கு |
| 18.06.15 | 1 | 33 | 23 | 6 | 78 | 65 | 16 | தென் மேற்கு |
| 19.06.15 | 0 | 33 | 23 | 6 | 78 | 65 | 16 | தென் மேற்கு |
| 20.06.15 | 0 | 32 | 22 | 7 | 85 | 70 | 16 | தென் மேற்கு |
| 21.06.15 | 3 | 32 | 22 | 7 | 85 | 70 | 16 | தென் மேற்கு |

## வேளாண் அறிவுரை

- எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் 70WS மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்த குறுகிய கால கார் பருவ நெல் வயல்களில் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.
- தக்காளி நாற்றாங்கால் அமைக்க இது நல்ல தருணம். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.
- பருவமழை கால திராட்சையில் காய்ந்த மற்றும் வளர்ச்சியில்லாத கிளைகளை கவாத்து செய்ய இது நல்ல தருணமாகும்.

## குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் 70WS மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**